

நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நேற்று (13.12.2024) தலைமைச் செயலகத்தில் சென்னை மண்டலத்தில் ”ஃபெஞ்சல் புயலினால் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நீர்வளத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், முதன்மைத் தலைமைப் பொறியாளர் சா. மன்மதன், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் திருமதி மு. ஜானகி, மற்றும் நீர்வளத் துறை பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை மண்டலம் – விழுப்புரம் – கடலூர் – கள்ளக்குறிச்சி உள்ளிட்ட மாவட்டங்களில்

# ஃபெஞ்சல் புயல் பாதிப்புகள் - எடுக்கப்பட்ட புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து ஆய்வு!

## நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் மேற்கொண்டார்!

சென்னை, டிச.14-

சென்னை மண்டலத்தில் “ஃபெஞ்சல்” புயலினால் பாசன கட்டுமானங்களில் ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் எடுக்கப்பட்ட புனரமைப்பு நடவடிக்கைகள் குறித்து நீர்வளத் துறை அமைச்சர் துரை முருகன் ஆய்வு மேற்கொண்டார்.

ஃபெஞ்சல் புயல் மற்றும் வெள்ளத்தினால் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ஏரிகள், அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்களில் ஏற்பட்ட சேதம் மற்றும் புனரமைப்பு பணிகள் தொடர்பாக நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

மேற்காணும் கூட்டத்தில் சேதமடைந்த நீர்வளத்துறை கட்டுமானங்களின் தற்காலிக புனரமைப்பு பணிகளை விரைவில் செய்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும் சேதம் அடைந்த கட்டுமானங்களின் புனரமைப்பிற்கு தேவை யான நிதி ஒதுக்கீடு பெற மதிப்பீடுகளை தயாரித்து உடனடியாக அரசுக்கு அனுப்பி வைக்கவும் அறிவுறுத்தினார். ஆய்வின் போது அமைச்சர் அவர்கள் தென்பெண்ணை ஆறு, மலட்டாறு, கோரையாறு, கெடிலம் ஆறு மற்றும் நந்தன் வாய்க்கால் சேதங்களை விரிவாக ஆய்வு செய்தார். குறிப்பாக, எல்லிஸ் அணைக்கட்டு, சொர்ணாவூர் அணைக்கட்டு, திருக்கோவிலூர் அணைக்கட்டு மற்றும் தளவானூர் அணைக்கட்டு சேதங்களையும் அவற்றின் புனரமைப்பு தொடர்பான விவரங்களையும் தனித்தனியே கேட்டறிந்தார். நீர் நிலைகளை தொடர்ந்து கண்காணிக்கவும் அறிவுறுத்தினார்.

மேலும் சென்னை மாநகர குடிநீர் ஆதாரங்களான பூண்டி, செம்பரம்பாக்கம், புழல், சோழவரம் போன்ற ஏரிகளின் நீர் வரத்து, நீர் இருப்பு மற்றும் நீர் வெளியேற்றத்தை தொடர்ந்து கண்காணித்து பொது மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படா வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள ஆலோசனை வழங்கினார். மேலும் கடலோர மாவட்டங்கள் மற்றும் தென் மாவட்டங்களில் உள்ள நீர் ஆதாரங்களை கவனமுடன் கண்காணிக்கவும் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் நீர்வளத் துறை கூடுதல் தலைமைச் செயலர் டாக்டர் க.மணிவாசன், முதன்மை தலைமைப் பொறியாளர் சா.மன்மதன், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர், திருமதி மு.ஜானகி உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### தலைமை: ஜி.கே. விவேகானந்தன் (எ) ரவி! ஆர்.எஸ்.பாரதி – மீ.அ. வைத்திலிங்கம் பங்கேற்பு!

# புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியத்தில் மாபெரும் பொதுக்கூட்டம்!

### சுப.வீரபாண்டியன் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் – டி.ஆர்.பாலு எம்.பி. – இரா. ராஜிவ்காந்தி – வி. தினேஷ் சிறப்புரை!

சென்னை, டிச.14

புனித தோமையார் மலை வழக்கு ஒன்றிய திமுக சார்பில் கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி மாபெரும் பொதுக்கூட்டம் மூவரசம்பட்டு ஊராட்சி மன்றத் தலைவர் - புனித தோமையார்மலை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜி.கே. விவேகானந்தன் (எ) ரவி தலைமையில் இன்று (சனிக்கிழமை - 4.12.2024) மாலை 6:00 மணிக்கு கணேஷ் மஹால் எதிரில் மூவரசம்பட்டு சென்னை 91- ல் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு அவைத்தலைவர் எம்.சக்தி, துணைச் செயலாளர்கள் கே.செல்வராஜ், அ.விநாயகமூர்த்தி, மஞ்சுஜெயபாலன், பொருளாளர் ஆர். ராஜா, மாவட்ட கழக பிரதிநிதிகள் ஆர்.இளங்கோவன், டி.புருஷோதமன், மணல் எஸ். செல்வம் ஆகியோர் முன்னிலையிலும், தலைமை பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சதீஸ், மாவட்ட சுற்றுசுழல் அணி துணை அமைப்பாளர் பி.பிரசாத் ஆகியோர் வரவேற்புரையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு திராவிட இயக்க தமிழர் பேரவை பொதுச் செயலாளர் சுப. வீரபாண்டியன், மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., இளம் பேச்சாளர் வி. தினேஷ் ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இதில் கழக அமைப்புச் செயலாளர் ஆர் எஸ் பாரதி, தலைமை தீர்மான குழு செயலாளர் மீ.அ. வைத்திலிங்கம், இ. கருணாநிதி, எம்.எல்.ஏ., எஸ். ஆர். ராஜா எம்.எல்.ஏ., பகுதி செயலாளர் த. ஜெயக்குமார், தொமுச பொது செயலாளர் இரா. பொன்ராம், எம். கே. பழனி மற்றும் ஒன்றிய பிரதிநிதிகள், ஊள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கிளை நிர்வாகிகள்

கழக முன்னோடிகள். வாக்குசாவடி நிலை முகவர்கள், கழக இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி உள்ளிட்ட அனைவரும் நிகழ்ச்சியில் கலந்துக்கொண்டு

சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்..

இறுதியில் மாணவரணி அமைப்பாளர் ஜி.கே.வி. அன்பு பிரபாகரன் நன்றியுரை ஆற்றுகிறார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் நகர முன்னாள் அவை தலைவரும் 23 வது வார்டு கழக செயலாளர் தே.செல்வின் தகப்பனார் தே.தேவன் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு நிகழ்வு நடைபெற்றது இதில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டு படத்தை திறந்து வைத்து மரியாதை செலுத்தினார்கள். உடன் திருவள்ளூர் நகரக் கழக செயலாளர் சி.சு.ரவிச்சந்திரன், நகர மன்ற தலைவர் உதயமலர் பொன் பாண்டியன், முன்னாள் நகரச் செயலாளர் கா.மு.தயாநிதி, பேச்சாளர் மனோகரன், நிர்வாகிகள் கைலாசம், டி.மோதிலால், பி.கே.நாகராஜ், சி.சு.விஜயகுமார், வீனஸ், ராஜ்பால், ஜி.பாண்டியன், மோகன், பாஸ்கர், சுரேஷ், ஆ. பவளவண்ணன், பி.ராஜ், ஜெபாகுமார், பாபு, பி.ஏழுமலை, நரேஷ், லோகநாதன், உள்பட கழக நிர்வாகிகள் குடும்பத்தினர்கள் பலர் கலந்து கொண்டனர்

### மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் துணை முதல்வர் பிறந்த நாள்விழா!

## மாவட்ட அமைப்பாளர் நாத்திகம் நாகராசன் அறிக்கை!

காஞ்சிபுரம் டிச.14-

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் கலைஞர்கள், தமிழறிஞர்கள், மொழிப்போர் தியாகிகளை பாராட்டி சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கும் விழா இன்று (14.12.2024 சனிக்கிழமை) காலை 9 மணிக்கு கலைஞர் பவள விழா மாளிகை சின்ன காஞ்சிபுரத்தில் நடைபெறுகின்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்டக் கழகச்செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை மாவட்ட அமைப்பாளர் நாத்திகம் நாகராசன் நான் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறேன். காஞ்சி மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்செல்வன், வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.குமார், வாலாஜாபாத் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.பாபு,. காஞ்சி தெற்கு ஒன்றியச் செயலாளர் க.குமணன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ.யுவராஜ் எஸ்.சந்துரு, கே.திலகர், அ.தசரதன், சு.வெங்கடேசன், கலைச்செல்விஜெகநாதன், எம். ஆர்.தனசேகரன், ஏ.சங்கர், வல்லரசு செங்குட்டுவன், ஜெ.முல்லைவாணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவல் சிறுவேடல் க.செல்வம் எம்.பி, சி.வி..எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., மேயர் மகாலட்சுமி யுவராஜ் ஆகியோர் கலந்த கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மேலும் ச.இனியரசு, டி.வீ.கோகுலகண்ணன், மலர்விழி குமார், சன்பிராண்ட் கே.ஆறுமுகம், இரா.நாதன், டி.ஆர்.நாராயணன், டாக்டர் ஆர்.டி.அரசு, எம்.எஸ்.சுகுமார், எஸ்.கே.பி.சீனி வாசன், எஸ்.சிகாமணி, சி.சசிகுமார், எழிலரசிசுந்தரமூர்த்தி, வெளிக்காடு வே.ஏழுமலை, எஸ். டி.பிரேம்சந்த், எஸ். உசேன், எஸ்.கே.ராஜேந்திரன், ஜி.சுகுமாறன், தி.அன்பழகன், ப.சுந்தரவரதன், வி.எஸ்.ராமகிருஷ்ணன் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

சு.முரளிதரன் நன்றி கூறுகிறார்.

இவ்வாறு நாத்திகம் நாகராசன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.


# சென்னைத் தெற்கில் ஒரு மாதம் முழுவதும்

# “உதயநிதியின் உதயநாள்” விழா

## 364 சொற்பொழிவாளர்கள் பங்கேற்கும்
## 182 பிறந்தநாள் கூட்டங்களின் “இன்றைய நிகழ்ச்சிகள்”



14.12.2024 - சனிக்கிழமை

| வ.எண் | சொற்பொழிவாளர்கள் | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 1. | நெல்லை மணி<br>இ.சக்திவேல் | 170 வட்டம் – சித்ரா நகர், கோட்டூர்புரம்,<br>சைதாப்பேட்டை கிழக்கு பகுதி. | எஸ்.புவனேஸ்வரி<br>ம.அ.மா.து.அமைப்பாளர்<br>ஆர்.நந்குமார் பகுதி பிரதிநிதி |
| 2. | நந்தனம் நம்பிராஜன்<br>அ.செல்வகுமார் | 138 அ வட்டம் – பிள்ளையார்கோவில் தெரு,<br>ஜாபர்கான் பேட்டை, கலைஞர் நகர் தெற்கு பகுதி. | கே.சண்முகம்<br>வட்ட துணை செயலாளர் |
| 3. | கோவி.லெனின்<br>ச.சரண்யா | 177 வட்டம் – ராஜலட்சுமி நகர், ஜகந்நாதபுரம்,<br>வேளச்சேரி மேற்கு பகுதி. | பொ.த.மதிவாணன்<br>வட்டச் செயலாளர் |
| 4. | ஆற்காடு அகிலன்<br>ஜெ.ஜெபின் | 198 வட்டம் – அண்ணா தெரு, காரப்பாக்கம்,<br>சோழிங்கநல்லூர் மத்திய பகுதி. | பா.தேவக்குமார்<br>வட்டச் செயலாளர் |
| 5. | ஆத்தூர் சபரி<br>வாலாசா இரா.தமிழ்வாணன் | 151 வட்டம் – லட்சுமி நகர், போரூர், மதுரவாயல்<br>தெற்கு பகுதி. | ஆ.மோசஸ்<br>வட்டச் செயலாளர் |
| 6. | முனைவர். பொன்னேரி சிவா<br>மகேஷ் | 192 வட்டம் – காமராஜர் சாலை, நீலாங்கரை,<br>சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி. | இரா.நாகேந்திரன்<br>இளைஞர்அணி ப.அமைப்பாளர் |

9444129952

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிப்போர் :

மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அளவிலான அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். எனவே கழகத் தோழர்கள் பெருந்திரளாக இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

## சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

அன்புடன் : அமைச்சர் மா.சுப்பிரமணியன் B.A., LL.B.,
மாவட்ட கழக செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.